
உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை

Monthly Journal of Sivapoomi

சிவம்-05 சோபகிருது வருடம் ஆவணி திங்கள் ஆகஸ்ட் 2023 பூமி-06

## தமிழ் மண்ணில் தமிழ் மொழி மூல கல்வி பல்கலைக்கழகங்களில் அவசியம்



யாழ்ப்பாணபல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர் தொகை 55 வீதம் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் பத்மநாதன் அவர்களும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் எதிர்காலம் தொடர்பாக கவலை தெரிவித்துள்ளார். இதற்கு பலர் பல காரணங்களை சொன்னாலும் வடக்கு கிழக்கில் தமிழ் மாணவர்களில் உயர்தரப் பரீட்சை இரண்டாம் தரம் எடுப்பவர்களுடைய தொகை மிகவும் குறைவடைந்திருக்கிறது. தமிழர்களுடைய சனத்தொகை வளர்ச்சி வீதத்தின் தாக்கமும் பல்கலைக்கழக மாணவர் அனுமதியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மூன்றாவது விடயம் வெளிநாடுகளையே நம்பி வாழும் சமூகமாக ஈழத்தமிழர்களுடைய மனநிலை சிறுபராயத்திலேயே கருக் கொள்ளுகின்றது. தாய் நாட்டில் படித்து உயர் கல்விமான்களாக வரவேண்டும் என்பதில் மாணவர்களிடம் இலச்சியங்கள் மிகவும் குறைவாக காணப்படுகிறது.


இந்நிலை தொடருமானால் வடக்கு மாகாணத்திலே தமிழர்களுக்காக இருக்கின்ற பல்கலைக்கழகத்திலும், கிழக்கிலே இருக்கிற தமிழர்களுடைய பல்கலைக்கழகத்திலும் மாணவர்தொகை வீழ்ச்சி அடைவதற்கு ஏதுவாக இருக்கின்றது. யாழ்பாண பல்கலைக்கழகத்திலே பெரும்பாலான துறைகள் இப்பொழுது ஆங்கில மொழி மூலமாக தொடர்வதனால் தமிழ் மாணவர்களுடைய தொகை அங்கேயும் பாதிப்படைந்துள்ளது. குறிப்பாக சட்டத்துறை, தொழிநுட்பத்துறை, விவசாயத்துறை, மீன்பிடித்துறை மற்றும் விறையாட்டுத்துறை இவை யாவும் ஆங்கில மொழி மூலமான கற்கைநெறிகளாக அமைந்தமையால் ஆங்கில மொழிமூலமான கற்கை நெறிகளுக்கு இலங்கை முழுவதிலும் இருந்து விண்ணப்பங்கள் வரும்போது வடக்கு, கிழக்கு தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தமிழர்களுடைய பல்கழைக்கழகங்களில் மொழி மூலம் தமிழ்மொழியாக பாடத்திட்டங்களை அமைப்பார்களேயானால் பல தமிழ் மாணவர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். ஆங்கிலம் கட்டாய பாடமாக இருப்பதனால் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. கற்கை மொழிமூலமே ஆங்கிலம் என்று இருப்பது எங்களுடைய சமூதாயத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

**ஆசிரியர்**
கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்


**உதவி ஆசிரியர்**
திரு. ச. சந்தோஷன்

**வடிவமைப்பாளர்**
திரு. வ. குணநீதன்

எனவே கல்விமான்கள் இவ்விடயம் தொடர்பாக சிந்தித்து செயற்பட வேண்டும். ஆங்கில மொழிமூல கற்கை நெறிக்கு உயர் கல்வி அமைச்சு உடனடியாக அனுமதியை வழங்குவது குறிப்பாக தமிழ் மாணவர்களுடைய தொகையை குறைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும். இதற்கு உடந்தையாக தமிழ் அறிஞர்கள் இருந்து விடக்கூடாது. தமிழ் அறிஞர்கள் தமிழர்களுக்கு சொந்தமான பல்கலைக்கழகங்களை எதிர்காலத்தில் எவ்வளவு தூரம் தமிழ் மாணவர்களை உள்வாங்க முடியுமோ அதற்கு வழிகோல வேண்டும். அவர்கள் இந்த தவறை விடுவார்களேயானால் எதிர்காலத்திலே வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களுடைய பல்கழைக்கழகம் வேந்தர் அவர்கள் குறிப்பிட்டது போலே கேள்விக்குறியாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.









தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் ஆடி மாத செவ்வாய்க் கிழமைகள் தோறும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றதோடு பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டார்கள். 22.07.2023 சனிக்கிழமை அன்று ஆடிப்பூர விசேட வழிபாடுகளும் இடம்பெற்று அம்மன் அழகிய இரதத்தில் திருவீதியுலா வந்தார்.

## ஆலய மகிமை உணராத சமுதாயம் உருவாவது

# பேராபத்து!

வலி வடக்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த விசேட கூட்டத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஆற்றிய உரையின் முழு வடிவம்...

சமீப காலத்தில் சைவக் கோவில்களில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான பிரச்சினை ஒரு கோவிலிலும் தற்பொழுது பிரசங்கம் கிடையாது. சைவ நற்சிந்தனை கிடையாது என்பதே ஆகும். எல்லா கோவில்களிலும் கட்டிட வேலைகள் நடக்கின்றன ஆனால் ஆலய நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு கூட ஆலயத்தின் பல மகத்துவங்கள் பற்றி தெளிவாக தெரிவதில்லை. எந்த விக்கிரகம் எதற்காக வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் சரியான முகூர்த்தங்கள் என்ன? மற்றும் புராண இதிகாசங்களின் மகிமை என்ன? விரதங்களின் மகிமை என்ன? என்று சொல்லக் கூடிய தகுதி ஆலய நிர்வாகிகளுக்கு கூட அற்ற அவலம் தற்காலத்தில் நிலவுகின்றது.

எனவே எனது முதலாவது அறிவுரை உங்கள் ஆலயம் சிறிதாக இருக்கலாம் பெரிதாக இருக்கலாம் உங்கள் ஆலயத்தினை சுற்றி இருக்கின்றவர்களை அழைத்து அது வெறும் 10 நபர்களாக இருந்தாலும் உங்கள் ஊரில் உள்ள ஒரு ஆசிரியரை அழைத்து ஒரு சிறிய நற்சிந்தனையை ஏற்பாடு செய்யுங்கள். இதனை ஆலய அறங்காவலர்கள் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அறிவுரைகளை செவி வழியாக கேட்டு செவி வழியாக விட்டு விட்டு செல்லாமல் இதனை கட்டாயமாக நடைமுறைப் படுத்துங்கள்.




உங்களுக்கு தெரியும் முன்பு சிறிய ஆலயமாக இருந்தாலும் வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரர்த்தனை நடைபெறுவதும் அந்த ஊரில் உள்ள பெரியவர் கொஞ்ச நல்ல விடையங்களை சொல்லுவதும் பெரிய ஆலயங்களில் பிரசங்கத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வழக்கம் இருந்தது. தற்காலத்தில் ஆலய சிவாச்சாரியார்கள் பிரசங்கம் வைக்க வேண்டாம் எங்களுக்கு நேரம் இல்லை என்று சொல்லும் அவலம் நிகழ்கின்றது. ஆலய கும்பாபி‘க பத்திரிகையில் கூட ஒலிபெருக்கி கட்டுறவனின் பெயர் கூட இடம்பெறுகின்றது. பிரசங்கத்திற்கு இடமே இல்லாமல் போய்விட்டது.

இந்த நடைமுறைகள் எல்லாம் சமீப காலமாக ஆலயங்களில் நடக்கின்ற அவலமாக உள்ளது. பழைய காலத்தில் உள்ள கும்பாபி‘க பத்திரிகையை எடுத்துப் பாருங்கள் என்ன மாதிரி இருக்கின்றது தற்காலத்தில் என்ன மாதிரி இருக்கின்றது என. அறங்காவலர்களே உங்களுக்கு ஒரு நட்டமும் இல்லை. வெள்ளிக் கிழமைகளில் ஒரு கொத்து அரிசி போட்டு ஆலயத்தை சுற்றி இருக்கின்ற சிறுவர்களை அழைத்து ஒரு சின்ன கூட்டுப் பிரார்த்தனை நடத்துங்கள். ஆகக் குறைந்தது சிவபுராணம் பாட வையுங்கள். இதை நீங்கள் செய்யாமல் ஆலயத்தை பூட்டி நீங்கள் திறப்பு எடுக்கிறதால எந்த நன்மையும் இந்த சமூகத்திற்கு கிடைக்கப்பேவதில்லை.

அறங்காவலர்களும் நிர்வாகிகளும் ஆலயங்களுக்கு நிறைய பூட்டுகளை வாங்கி பூட்டி அதன் திறப்புக்களை இடுப்பில் கொண்டு திரிகின்றார்களே அல்லாமல் சமயத்தை வளர்க்கவில்லை. அதிலும் திறப்பை யார் வைத்திருக்கின்றது என சண்டை போட்டுக் கொண்டு திரிகின்றார்கள்.

ஒரு காலத்தில் அகலத் திறந்திருந்த ஆலயங்கள் இன்று பூட்டு போட்டு பூட்டி வைத்துள்ளார்கள். தற்போது தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தை அதிகாலை தொடக்கம் மாலை வரை திறந்து வைத்திருக்கின்றோம். எந்த அடியவரும் அதிகாலை 5.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை சுற்றிக் கும்பிட முடியும். பக்கதர்களுக்குதான் ஆலயமே தவிர நிர்வாகிகளுக்கு அல்ல. ஆனால் பலர் வைத்தியரை சந்திக்கும் நேரம் போல நேர அட்டவனை வைத்துள்ளார்கள். காலையில் சாமிக்கு பூட்டு மதியம் சாமிக்கு பூட்டு என ஆலயத்தை பூட்டு போட்டே வைத்துள்ளார்கள். உங்கள் ஊரியில் உள்ள ஓய்வூதியர்களை அழைத்து கால நேரங்களுக்கு ஏற்ப ஆலயங்களை முழுமையாக திறந்து வைத்திருங்கள். பல வெளிநாட்டில் இருந்து வரும் மக்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டு தற்காலத்தில் எல்லா கோவில்களும் பூட்டி இருக்கின்றது. ஒரு அர்ச்சனை செய்வம் என்று போனால் பூட்டி இருக்கின்றது ஆலயங்கள். தற்காலத்தில் மனிதன் மிக

வேகமாக இயங்குகின்றான். அவனுக்கு நேரம் கிடைக்கும் பொழுது எல்லாம் வந்து சாமியை வணங்குவான். எனவே ஆலயங்களை பூட்டு போட்டு பூட்ட வேண்டாம்.

அடுத்து எனது அறிவுரை ஆலயங்களை சுத்தமாக வைத்திருங்கள். சிவத்தமிழ் செல்வி அவர்கள் அமைத்த பெண்கள் தொண்டர் சபையினர் எமது ஆலயத்தின் ஒவ்வொரு பூசைப் பொருட்களையும் நன்றாக சுத்தம் செய்து வைப்பார்கள். ஒவ்வொரு செய்வாய்க்கிழமை பூசைக்கு முன்பதாக அனைத்து ஆலய பூசைப் பொருட்களும் நன்றாக பள பளவென மினுங்கும். தற்காலத்தில் பல ஆலயங்களில் பார்த்துள்ளேன். கடவுளுக்கு காட்டுகின்ற தீபத்தில் உள்ள அழுக்குகளை பார்த்தால் இதை ஏன் இறைவனுக்கு காட்ட வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. அந்தளவிற்கு சக்கு பிடித்துபோய் உள்ளது. இறைவனுக்கு காட்டுகின்ற தீபத்தை கூட மினுக்குவதற்கு நிர்வாகத்தால் முடியவில்லை என்றால் எதற்காக ஆலயங்கள்? தயவு செய்து ஆலய நிர்வாகத்தில் இருப்பவர்கள் ஆலய பூசைப் பொருட்களை சுத்தப்படுத்த உங்கள் ஊரில் உள்ள 5 பெண்களை ஏற்பாடு செய்யுங்கள்.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடி"

முன்பு ஆலயங்கள் எல்லாம் அழகாக சுத்தமாக மெழுகினார்கள் ஆனால் தற்காலத்தில் எல்லாம் சிமெந்து ஆகிவிட்டது. ஆனால் சுத்தமில்லை. சமீபத்தில் வெளிநாட்டில் இருந்து வருகை தந்த சிறுவன் ஒருவன் ஒரு ஆலயத்தில் பிரசாதம் கொண்டு வந்த பாத்திரத்தில் உள்ள அழுக்குகளை பார்த்து னுசைவல என்று பேசுகின்றான். பிரசாதம் என்பது பிரம்மத்திற்குரிய சாதம் அது. எந்தளவு சுத்தமாக வைத்திருக்க வேண்டும் அதனை கூட கவனிக்காமல் ஆலயம் நடத்துகின்றார்கள் சிலர்.

அடுத்து ஆலய அறங்காவலர்கள் மற்றும் நிர்வாகிகள் மிக முக்கியமாக மேற்கொள்ள வேண்டிய விடையம் ஆலய சுற்றாடல்களில் இருக்கும் மக்களை நேசிக்க வேண்டும். உங்கள் ஆலயத்திற்கு அருகில் உள்ள ஒரு மாணவன் தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றால் உங்கள் ஆலயத்தால் ஒரு கொப்பி ஒரு பேனாவை பாராட்டி பரிசாக கொடுத்தால் அந்தப் பிள்ளைக்கு ஆலயத்தில் ஒரு பற்று வரும்.

மக்களிடம் பணம் வாங்கி வாங்கி வங்கிகளில் நிரப்ப வேண்டாம். நான் தலைவராக இருக்கும் போது போட்ட பணத்தை அடுத்த தலைவர் வந்து எடுத்து செலவு



செய்து விட்டார் என சண்டை போட வேண்டாம். வங்கிகளில் நிரப்புவதற்கல்ல பணம். ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். ஆலயத்தின் பெயரால் நல்ல பல கருமங்களை ஆற்ற வேண்டும்.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வாரத்தின் இரு நாட்கள் அன்னதானம் வழங்குகின்றோம். பல அன்பர்கள் எமது பணிகளை பார்த்து தாமாகவே முன்வந்து பல உதவிகளை செய்கின்றார்கள். நல்லவற்றை செய்ய ஆரம்பித்தால் மக்கள் தமாக முன்வந்து உதவி செய்வார்கள். ஒரே நாளில் கும்பாபிேஷகத்திற்காக கோடிக் கணக்கில் பணத்தை செலவு செய்து விட்டு மறுநாள் சாமியையும் மக்களையும் பட்டினி போட வேண்டாம். சரியாக திட்டமிட்டு நல்லவற்றை செய்யுங்கள்.

அடுத்தது ஆலங்கள் ஊடாக அறநெறி பாடசாலைகளை நடத்துங்கள். இந்து காலாசார திணைக்களம் அறநெறி பாடசாலைகளை ஊக்குவிக்க பல திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. அதனை விட மேலதிக உதவிகள் உங்களுக்கு தேவைப்பட்டால் நீங்கள் சிறப்பாக செயல்படுவதாக பிரதேச செயலாளர் சிபார்சு செய்தால் நாங்கள் துர்க்காதேவி ஆலயத்தால் பல உதவிகளை வழங்க தயாராக உள்ளோம். ஒவ்வொரு ஆலயத்தாலும் அறநெறி பாடசாலைகளை நடாத்தும்போது அந்த மாணவர்களே அந்த ஆலயத்தின் அறப் பணிகளை மேற்கொள்வார்கள். ஒரு ஆலயத்தால் அகக் குறைந்தது 5 பிள்ளைகளை தன்னும் வளப்படுத்த முடியவில்லை என்றால் அந்தக் கோவிலை நடாத்துவதால் எந்தப் பயனும் இல்லை.

அடுத்து மிக முக்கியமான விடையம் ஆலயப் பொருட்களுக்கான பொருட் பதிவேட்டினை சிறப்பாக பராமரிப்பது. ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள சொத்துக்களையும் வருமானங்களையும் செலவுகளையும் மிகவும் முறைப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் அதனை மேற்கொண்டால் அந்த ஆலயத்தின் மீது ஒரு நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்படும். வலி வடக்கில் சில ஆலயங்களில் உள்ள பொருட்கள் களவு போன பின்பு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவு

செய்யப்பட்டது.

அவ்வாறு களவு போன பல சாமி விக்கிரகங்கள் கொழும்பில் இருப்பதாக சொன்ன போது துர்க்காதேவி தேவஸ்தானத்தால் 65,000 ரூபா செலவு செய்து அவற்றை இங்கு கொண்டு வந்து களவு போன உங்கள் விக்கிரகங்களின் அளவு மற்றும் விபரங்களை சொல்லுங்கோ என கேட்டால் அறங்காவலருக்கும் நிர்வாக உறுப்பினர்களும் பதில் சொல்ல முடியாத வகையில் நிற்கின்றார்கள். அவர்களுக்கு அவர்களின் ஆலயங்களில் உள்ள பொருட்கள் பற்றி விபரங்கள் சரியாக தெரியாது. எனவே ஆலயங்களில் உள்ள ஒவ்வொரு பொருட்கள் பற்றியும் விரிவான தகவல்களை எடுத்து அவற்றை ஒவ்வொரு வருடமும் மேற்பார்வை செய்ய வேண்டும்.

உங்கள் ஆலயங்களில் உள்ள நகைகளின் விபரங்கள் என்ன என்று கேட்டால் தெரியாது என்று சொல்லுகின்றார்கள் ஆலய நிர்வாகிகள். பல ஆலயங்கள் வான வேடிக்கைக்கும் ஆடம்பரத்திற்கும் பல இலட்சங்களை செலவு செய்கின்றார்கள் ஆனால் நாங்கள் துர்க்கை அம்மன் ஆலயத்தில் அந்த நிதியை அன்னதானத்திற்கு செலவு செய்கின்றோம்.

உங்கள் ஊரில் உள்ள ஆகக்குறைந்து 10 பிள்ளைகளை தன்னும் உங்கள் ஆலயத்திற்கு அழைத்து தேவாரம் பாடச் சொல்லுங்கோ. ஆலயங்கள் திருத்தினால் நமது சமூகம் தானாக திருந்தும். சிலர் சுப்பிரபாதத்தை ஒலி பெருக்கியில் ஒலிக்க விட்டு அவர்கள் தங்கள் பாட்டினைப் பார்க்கின்றார்கள். இதனனால் யாருக்கு என்ன நன்மை?

ஆலயங்களில் நிர்வாக பதவிகளுக்காக சண்டை பிடித்து எவருக்கும் ஒரு பயனும் இல்லை. நான் பல ஆலயங்களில் பொறுப்பு வகிக்கின்றேன். என்னிடம் ஒரு திறப்பும் இல்லை. ஆனால் அவை அனைத்தும் மிகவும் சிறப்பாக இயங்குகின்றது. மற்றவர்கள் மீதும் நம்பிக்கை வையுங்கள். கடமைகளையும் பொறுப்புக்களையும் பிறரிடமும் ஒப்படையுங்கள். அதைவிடுத்து எல்லா திறப்புக்களையும் நானே கொண்டு திரிவன் என நினைத்தால் ஒன்றும் நடக்காது.

அடுத்தது சகல ஆலயங்களிலும் ஒரு அலுமாரியைப் பாதுகாத்து திருமுறைப் புத்தகங்களை பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள். ஆலய கும்பாபிடேக மலர்கள் மற்றும் ஆன்மீக புத்தகங்களை முறைப்படி பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் பெரிய ஆலயங்களுக்கு சென்று உங்களிடம் ஏதாவது புத்தகங்கள் இருக்குதா என கேட்டால் திருவெம்பா புத்தகம்தான் உங்க செருகி வைத்தனாங்கள் என பொறுப்பற்ற வகையில் பதில் சொல்கின்றார்கள். வேறு புத்தங்கள் ஒன்றுமில்லை. 10 கும்பாபிடேங்கள் நடத்தியிருப்பார்கள். ஆனால் ஒரு கும்பாபிடேக மலர் கூட ஆலயங்களில் இருக்காது. தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தால் திருமுறை புத்தகங்களை அச்சிட்டு ஆலயங்களுக்கு இலவசமாக வழங்கினோம். ஆனால் இன்று அந்த நூல்கள் எங்கே வைத்துள்ளீர்கள் என கேட்டால் தெரியாது என பதில் சொல்கின்றார்கள்.

21ம் நூற்றாண்டில் இந் சமூகத்தை ஏமாற்றாமல் சமூகத்திற்கு நன்மையினை செய்ய பழகிக் கொள்ளுங்கள். தற்காலத்தில் பல ஆலயங்கள் எங்களின் அடிப்படை மரபுகளை மறந்து விட்டார்கள். ஆலய உற்சவங்களின் போது மாவிலைத் தோரணங்களை காண தற்காலத்தில் முடிவதில்லை. அண்மையில் பல கோடிகளை செலவு செய்து நடந்த கும்பாபிடேகத்திற்கு சென்ற போது அங்கு மாவிலைத் தோரணங்களை காண முடியவில்லை. புதுவருடம், தீபாவளி, தைப்பொங்கல் என எதற்கும் மாவிலை தோரணம் இல்லை என்றால் எதற்கு கோவில்? மாவிலை தோரணத்திற்கு அர்த்தமே மங்களம் உண்டாகும் என்பதாகும். மரபுகளை மறந்து ஆலயங்களை நடத்தாமல் மரபுகளுடன் அதனை நல்ல சமூக நிறுவனமாக நடத்துங்கள். தற்காலத்தில் பல ஆலயங்களில் மங்களமே இல்லை வெறும் சண்டைகளாகவே உள்ளது.


எனக்கு உள்ள மிகப் பெரிய கவலை என்னவென்றால் நாங்கள் பல மரபுகளையும் அடிப்படைகளையும் தொலைத்து விட்டோம். கட்டுவன் பாலர் ஞானோதய சபை 1923ம் ஆண்டு நடாத்திய நிகழ்ச்சி பற்றிய தகவல்களை நான் இந்து சாதனத்தில் வாசித்தேன். உங்கள் ஆலயங்கள் பற்றிய வரலாற்றை நீங்கள் பாதுகாக்க வேண்டும். அவற்றை முறையான பேண வேண்டும். பாருங்கள் 1923ம் ஆண்டே பல சபைகளை உருவாக்கி பல தொண்டுகளை செய்து சமூகத்தை நல் வழிப்படுத்தியுள்ளார்கள் எம் முன்னோர்கள். ஆனால் 21ம் நூற்றாண்டில் கோவில்கள் யாவும் பூட்டில் கிடக்கின்றது.

தயவு செய்து ஆலயங்களை சார்ந்த அறங்காவலர்கள் மிகுந்த அக்கறை எடுத்து ஆலங்களை பாதுகாத்து கொள்ளுங்கள் ஆலயங்களை சுத்தமாக வைத்திருங்கள். சமூகத்தை நல்வழிப்படுத்தும் சமூக தொண்டு நிறுவனமாக செயல்படுங்கள். உங்களுக்கு எதாவது உதவி தேவை என்றால் நாங்கள் உதவி செய்ய எப்பொழுதும் தயாராகவே உள்ளோம்.

நன்றி

உரை செவிமடுத்தல் மற்றும் எழுத்துருவாக்கம்.
-சிவசொரூபன்-








யா/இணுவில் இந்துக்கல்லூரியின் ஸ்தாபகர்களான மகாவித்துவான் அமரர் பொன் அம்பிகைபாகர் மற்றும் அமரர் பிரம்ம ஸ்ரீ முருகேசுஐயர் வெங்கடாசல ஐயர் ஆகியோரின் உருவச்சிலைகள் அவர்களது உறவினர்கள் மற்றும் இணுவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் போன்றோரின் அனுசரனையில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனால் 12.07.2023 அன்று கல்லூரி வாயிலில் திறந்து வைக்கப்பட்டன. அதோடு அம்பிகைபாகர் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.



# நயினைத் தாயின் திருவிழா

வரலாற்றுச்சிறப்பு மிகு நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய சோபகிருது வருட திருவிழா 19.06.2023 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் சிறப்பாக நடைபெற்றது.

கடலலைகளால் நாற்புறமும் தாலாட்டப்படும் நயினை அம்பாளின் திருக்கோயிலுக்கு இலங்கையின் பல பகுதிகளிலிருந்து மட்டுமல்ல புலம்பெயர்ந்த பக்தர்களும் பெருமளவில் கடல் கடந்து வந்து பக்திப்பரவசத்தோடு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.















# கீரிமலை சிவபூமி முதியோர் இல்லம்









சரித்திர புகழ் பெற்ற கீரிமலையில் சுத்தமான ஆன்மீக காற்று வீசும் நல்ல இனிமையான இயற்கை சூழலில், பல முதியோர்களுக்கு உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆறுதல் அளித்து வருகின்றது இந்த மடம். சிவபூமி அறக்கட்டளை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு மனிதநேய அறப்பணிகளை ஆற்றி வருகின்றது. அதன் ஒரு அங்கமாக கடந்த 2017ம் ஆண்டு தொல்புரத்தில் ஒரு முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு பல முதியவர்களுக்கு ஆறுதல் அளித்து வருகின்றது. இருப்பினும் மேலும் பல புதிய விண்ணப்பங்கள் முதியவர்களிடம் இருந்து தொடர்ச்சியாக கிடைத்து வந்தமையால் புதிய இல்லம் ஒன்றை புதிய இடத்தில் அமைக்க வேண்டிய தேவை இருந்தது. கிருஸ்னபிள்ளை மடத்தின் மூன்றாவது தலைமுறை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் முன்னாள் அதிபர் கிருஸ்னபிள்ளை அவர்கள். அதிபர் கிருஸ்னபிள்ளை அவர்கள் அமரத்துவம் அடைந்து விட்டார் அவருடைய புதல்வன், இந்த மடம் இருந்த காணியை சிவபூமி அறக்கட்டளைக்கு அன்பளிப்பாக வழங்கி ஏதாவது நல்ல தர்ம காரியத்திற்கு பயன்படுத்துமாறு கோரினார். அற்கமைவாக இவ் காணியில் முதியோர் இல்லம் அமைக்கப்பட்டு நடமாடும் முதியோர்கள் பலர் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். இவ் மடத்தில் நவீன வசதிகளுடன் பல அறைகள் கட்டப்பட்டுள்ளன அத்துடன் நாச்சார் முற்றம், ஆலயம், நூலகம் மற்றும் அழகிய பூந்தோட்டம் என்பன அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கட்டட பணிகள் ஆரம்பித்தவுடன் பல நல்ல உள்ளங்கள் ஒவ்வொரு அறையினை தமது குடும்பத்தின் பெயரால் கட்டுவதற்கு உதவிகள் புரிந்தார்கள் மிகவும் அழகுற அமைக்கப்பட்ட இவ் மடம் கடந்த 18.11.2021ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

## சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் இருபதாவது ஆண்டுவிழா





கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் இருபதாவது ஆண்டுப் பூர்த்தி விழா 03.07.2023 பாடசாலை மண்டபத்தில் மாணவர்களின் கலைநிகழ்வுகளோடும் பாடசாலையில் சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் கௌரவிப்போடும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக பேராசிரியர். சி.சிறீசற்குணராஜா அவர்களும், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி வை. மனோமோகன் தம்பதிகளும் கலந்து கொண்டனர். கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களின் தலைமையில் நடந்த இவ்விழாவில் சிவபூமி பாடசாலையின் 20 ஆண்டுகால சாதனைகளை உள்ளடக்கிய சிறப்பு மலரும், ஆன்மீக சுடர் ரிஷி. தொண்டுநாத சுவாமிகள் முயற்சியில் உருவான செஞ்சொற்செல்வரின் வாழ்க்கைத் தடங்களை ஆங்கிலத்தில் புகைப்படங்களுடன் கூறும் சிறப்பு நூலும் வெளியிடப்பட்டன.









இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையம்

இணுவிலை சேர்ந்த பிரித்தானியாவிலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த எழுத்தாளர் சிவ. தணிகாசலம் அவர்களின்

“ செவாலியர்
இளவாலை அமுது”

நூல் அறிமுக விழா - 09.07.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் இணுவில் பொது நூலக தகவல் தொழில் நுட்ப விரிவுரை மண்டபத்தில் விழா தலைவர் பேராசிரியர் க. தேவராஜா (முன்னாள் பீடாதிபதி முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் யாழ், பல்கலைக்கழகம்) அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் கு. அனுசனின் தேவாரத்துடன் வரவேற்புரையினை திரு .ம. ஜெயகாந்தன் (பொருளாளர் இ.பொ.நூ) அவர்கள் நிகழ்த்தினார்.







சிவசிறி.சோ.பிரசன்னக்குருக்கள், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்.
(தலைவர். சிவபூமி அறக்கட்டளைகள்) ஆகியோரின் ஆசியுரையுடன் திரு. இரா.அருட்செல்வம் (போசகர்,இ.பொ.நூ) திரு . சிவலிங்கம் புரந்தரா ( தலைவர், இ.பொ.நூ) ஆகியோரின் வாழ்த்துரையும் இடம்பெற்றது.

முதற்பிரதியினை பிரபல சோதிடர் இராமலிங்கம். மகாராஜா (முதலி) அவர்கள் பெற்றுக்கொண்டார்.


நூல் ஆய்வுரையினை தகைசார் வாழ்நாட் பேராசிரியர் . வ. மகேஸ்வரன் பேராதனைப் பல்கலைக் கழகம் அர்களும் நூல்வெளியீட்டுரையினை திரு . ஈ.குமரன் சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ் பல்கலைக் கழகம் அவர்களும் நிகழ்த்தினார்கள். நூலாசிரியரின் ஏற்புரையுடன் மு.பிரவீன் உப செயலாளர் அவர்களின்






குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் (14.07.2023) குப்பிழான் விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்களால் விசேட பஜனை இடம்பெற்றது ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலை 4.00 அறநெறி பாடசாலை இடம்பெறுகிறது. பெருமளவிலான மாணவர்கள் பங்கேற்று பயன் பெறுகிறார்கள்.





மயூரபதி பத்ரகாளி அம்மன் ஆலய பால்குட பவனியானது ஆடிப்பூர நன்னாளில் (22.07.2023) பெருமளவு பக்தர்களுடன் மிகச்சிறப்பாக நடைபெற்றது.





# சுந்தர கைலாசம் திறப்பு விழா!



கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சுந்தர கைலாசம் எனும் புதிய கட்டட தொகுதி 15.07.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வில்,

பிரதம விருந்தினராக கலிபோர்னியாவில் இருந்து வருகை தந்த வைத்திய நிபுணர் க.சண்முகசுந்தரம் அவர்களும் அவரது துணைவியாரும் கலந்து சிறப்பித்தனர்.



சரித்திர புகழ் பெற்ற கீரிமலையில் சுத்தமான ஆன்மீக காற்று வீசும் நல்ல இனிமையான இயற்கை சூழலில்,

பல முதியோர்களுக்கு உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆறுதல் அளித்து வருகின்றது கீரிமலை சிவபூமி முதியோர் இல்லம்.

இவ் மடத்தில் நவீன வசதிகளுடன் பல அறைகள் கட்டப்பட்டுள்ளன அத்துடன் நாச்சார் முற்றம், ஆலயம், நூலகம் மற்றும் அழகிய பூந்தோட்டம் என்பன அமைக்கப்பட்டுள்ளது.



சிவபூமி அறக்கட்ளை கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு மனிதநேய அறப்பணிகளை ஆற்றி வருகின்றது.

அதன் ஒரு அங்கமாக கீரிமலையில் அமைந்துள்ள இவ் முதியோர் இல்லம் தற்பொழுது மேலும் பல வசதிகளுடன் கூடிய பல அறைகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவ் முதியோர் இல்லத்தினை அமைப்பதற்கு மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவனும் அமெரிக்காவில் வைத்திய நிபுணராக கடமையாற்றும் க.சண்முகசுந்தரம் அவர்களும் அவரது குடும்ப உறுப்பினர்களும் பெருமளவு பங்களிப்பு நல்கியுள்ளனர்.







# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வேந்தர் வாழ் நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் 19.07.2023 முதல் 21 ஆம் திகதி வரை மூன்று நாள்களில் 8 அமர்வுகளாக இடம்பெற்றது. இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 278 பேர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம், சேர் பொன் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடம், கலைப்பீடம், பொறியியல் பீடம், விஞ்ஞான பீடம், விவசாய பீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், தொழில்நுட்பப் பீடம், இந்துக் கற்கைள் பீடம், சித்த மருத்துவ அலகு மற்றும் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில் நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் வெளிவாரிப் பட்டங்களைப் பெறும் பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 32 தங்கப்பதக்கங்களும், 10 புலமைப்பரிசில்களும், 25 பரிசில்களும் வழங்கப்பட்டன. மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப் பதக்கத்தை பீட மட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப்பீடம் மற்றும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.






விழித்தவரெல்லாம் பிழைத்துக்கொள்வர் எனும் செயற்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட பாடசாலைகளின் சமூகநெறிக் கழகங்களின் பொறுப்பாசிரியர்களுடனான கலந்துரையாடல் 22.07.2023 அன்று கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் மண்டபத்தில் இடம்பெற்றது. வைத்தியர் ரஜீவ் அவர்களும் கலந்து கொண்ட நிகழ்வில் பிரித்தானியாவில் இருந்து வருகை தந்திருந்த வைத்தியர் க. பார்த்தீபன் அவர்கள் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்கள். எதிர்கால திட்டங்கள் தொடர்பான முக்கிய முடிவுகளை எடுக்கப்பட்டன.

அதன் ஒரு அங்கமாக கிளிநொச்சி றோயல் கல்வி நிலைய மாணவர்களுடனான போதைப்பொருள் விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் 23.07.2023 அன்று நடைபெற்றது. பெருமளவான மாணவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் கல்வி நிலைய அதிபர் குமார் அவர்களும், வைத்தியர் க. பார்த்தீபன் அவர்களும், துமி உறவுகளும் மாணவர்களுடன் போதைப்பொருட்களின் தீமைகள் சம்பந்தமாகவும், கல்வியின் தேவை சம்பந்தமாகவும் கலந்துரையாடினர்.







16.07.2023 நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயில் திறப்பு விழாவில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன் உரையாற்றும் போது...

## வரலாற்று அடையாளங்களை பேணுங்கள்

தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலங்கள் பற்றி எமக்கிருக்கின்ற சான்றாதாரங்களாக இலக்கியங்களும் தோரண வாயில் போன்ற சான்றுகளும் இன்றும் எம் கண்முன்னே இருக்கின்றன. யாழ்ப்பாண வைபவ மாலையில் ஆண்ட மன்னர்கள் கோயில்களை எவ்வாறு கட்டினார்கள் என்பதை ஆராய்வதற்கு உதவியாக உள்ளது.

கடைசி மன்னனான சங்கிலி.மன்னன் வீழ்ந்த காலத்திலிருந்து நாம் இடப்பெயர்வுகளைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். தமிழ் மன்னன் என்று வீழ்ந்தானோ அன்று முதல் எங்கள் இனம் சுதந்திரமின்றி விடிவின்றி ஓடிக்கொண்டிருக்கின்றது.

மொழிக்காக இனத்திற்காக பண்பாட்டிற்காக பலர் தமது உயிரையும் வாழ்வையும் அர்ப்பணித்தனர். எனவே அடையாளச் சின்னங்களை நாம் காப்பாற்றவில்லையெனின் அது துர்ப்பாக்கிய நிலைக்குரியது.

எம் மத்தியில் பல வரலாற்று அடையாளச் சின்னங்கள் காணப்பட்டாலும் அதை அறியாமல் பலருள்ளனர். யமுனா ஏரிக்கு அண்மையிலே நல்லூர் ஆலய அத்திவாரம் காணப்பட்டது. ஆனாலும் இன்று அங்கு தேவாலயம் எழுந்து நிற்கின்றது.

35 ஆண்டுகளாக சேர்த்த தொன்மைப் பொருட்களை பாதுகாக்க அருங்காட்சியகங்களை அமைக்க அரசியல் தலைவர்கள் உட்பட பலரிடம் உதவி கோரிய போதும் யாரும் முன்வரவில்லை. இறுதியில் பாரிய முயற்சியில் நாவற்குழியில் அரும்பொருட்காட்சியகம் அமைக்கப்பட்டது.

அங்கு 23 தமிழ் மன்னர்களுக்கு சிலை வைத்து வரலாறுகளைப் பொறித்தோம். அதற்காக பல முறை யார் அந்த மன்னர்கள் எனவும் எங்கிருந்து நிதி பெறப்பட்டதென விசாரணைக்குட்படுத்தப்பட்டேன்.

மரபுரிமைச் சொத்து அரசியலுக்கானதல்ல இனத்திற்கானது. வரலாற்று அடையாளங்களை சரியாகப் பேணாவிட்டால் அதை புனைவதற்கு ஒரு அணி தயாராகவுள்ளது. எனவே வரலாற்று தொன்மைகளைப் பாதுகாக்க அனைத்து கல்விமான்களும் முன்வர வேண்டும். என்றார்.









ஆடிப்பிறப்பு தினம் அன்று எமது சிவபூமி மனவிருத்திப் பாடசாலையின் மாணவச் செல்வங்கள் ஆடிக் கூழ் காய்ச்சி குடித்து மகிழ்ந்தார்கள்.











# கடவுள் எப்படிப்பட்டவன்?

ஆகாயத்தின் மேலிருந்து ஆளே தெரியாமல் ஆட்டியும் வைப்பான்.
மனிதன் ஆட்டம் கொஞ்சம் அதிகமானால் அடக்கியும் வைப்பான்.
அவன் தான் கடவுள்.

பூலோகத்தில் வாழும்போது புகழையும் கொடுப்பான்.
பின்னர் புகழுக்காக வாழும் போது புரட்டியும் எடுப்பான்.
அவன் தான் கடவுள்.

பூவிலே கொஞ்சம் தேனையும் வைப்பான்.
அங்கே தேனை வைத்ததை தேனீக்கும் சொல்வான்.
பின்னர் அந்தத் தேனடை இருப்பதை மனிதனுக்கும் சொல்வான்.
அவன் தான் கடவுள்

கேட்கும் திறனை கூர்மையாக எலிக்கும் வைப்பான்.
அந்த எலியே கேட்க முடியாமல் நடக்கும் பாதங்களை பூனைக்கும் வைப்பான்.
அவன் தான் கடவுள்.

ஓடும் திறனை கூட்டுகின்ற கால்களை மானுக்குக் கொடுப்பான்.
பின்னர் அந்த மானை பிடிக்கின்ற சக்தியை புலிக்கும் கொடுப்பான்.
அவன்தான் கடவுள்.

அற்புதமாய் சிந்திக்கின்ற ஆறறிவையும் கொடுப்பான்.
அதை முழுதும் பயன்படுத்தாத மனிதர்களையும் படைப்பான்.
அவன் தான் கடவுள்.

தவம் பல செய்தால் (மனிதன்) கேட்பதைக் கொடுப்பான்.
அவனே தறிகெட்டு நடந்தால் கொடுத்ததைப் பறிப்பான்.
அவன்தான் கடவுள்.

நாட்டை ஆள விட்டு அழகும் பார்ப்பான்.
அவனே கொள்ளையடித்தால் கொடுத்தவனே பிடுங்கவும் செய்வான்.
அவன் தான் கடவுள்.

புரியாதவனுக்கு புதிராய் இருப்பான்.
தன்னைப் புரிந்தவனுக்கு அறிவாய் இருப்பான்.
அவன் தான் கடவுள்.

கடல் முழுதும் தண்ணீரை வைப்பான்.
தாகம் எடுத்தால் தவிக்கவும் வைப்பான்.
அவன் தான் கடவுள்.

மாளிகையில் வாழ்பவன் ஆயுள் அற்பமாய் முடியும்.
சாலையோரம் வாழ்பவன் நூறாண்டு வாழ்வான்.
பின்னிருந்து இயக்குவான்.
அவன் தான் கடவுள்.

தன்னை வெளியே தேடினால் விளையாட்டுக் காட்டுவான்.
(உள்ளத்தின்) உள்ளே தேடினால் ஓடி வந்து நிற்பான்.
அவன் தான் கடவுள்.

கவியரசு கண்ணதாசன்

யாழ் மத்திய கல்லூரியில் 06.07.2023 அன்று இடம்பெற்ற போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன் மற்றும் வளவாளராக கலந்து கொண்ட மருத்துவர். திரு. ரஜீவ் ஆகியோர் மாணவர்களுடன் கலந்துரையாடினர். பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய சமூகநெறிக் கழகமும் உருவாக்கப்பட்டது.

அபயம் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்புடன் சிவபூமி மற்றும் துமி அமைப்புக்கள் முன்னெடுத்த மேற்படி நிகழ்வானது விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் கருத்திட்டத்தின் ஒரு அங்கமாகும்.







ISBN - 978-955-7420-00-4